பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 27 திங்கட்கிழமை 13.10.2025 கதிர் 337

## இனி இது ரகசியம் அல்ல!

வடக்கு கல்விப் புலத்தில் ஆசிரியர் சங்கங்களுக்கும் கல்வி நிர்வாகிகளுக்கும் இடையில் அடிக்கடி முட்டல்கள், மோதல்கள் உருவாகுவது வழமை. ஆனால் இந்தத்

☞2

## புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் பாடசாலைகளின் நேரம் அதிகரிப்பு

வரவிருக்கும் கல்வி சீர்திருத்தங்களின் கீழ் பள்ளி நேரம் பிற்பகல் 2 மணி வரை நீட்டிக்கப்பட உள்ளதால், மாணவர் போக்குவரத்தில் தேவையான மாற்றங்கள் குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திற்கு தகவல் தெரிவித்துள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நலகா கலுவேவா இதனைத் தெரிவித்தார். பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து தொடர்பாக ஏற்கனவே சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முதற்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மற்றொரு சுற்று கலந்துரையாடல் நடைபெறும் என்றும் கூறினார்.

'தேவையான தகவல்களை நாங்கள் ஏற்கனவே வழங்கியுள்ளோம். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் இப்போது நிலைமையை மதிப்பாய்வு செய்து வருகிறது. புதிய பாடசாலை அட்டவணை செயல்படுத்தப்பட்டவுடன் போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பான தேவைகளை நாங்கள் தெரிவித்துள்ளோம். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அதற்கேற்ப பதிலளிக்கும்' என்றார் அவர்.

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் கீழ், 1 முதல் 6 வரையிலான பாடசாலை நேரம் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நீட்டிக்கப்படும், இது தற்போதைய பிற்பகல் 1:30 மணியிலிருந்து 30 நிமிடங்களால் அதிகமாகும். திருத்தப்பட்ட அட்டவணை, நீண்ட 50 நிமிட நேரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், கோவிட்-19 தொற்றுநோய் போன்ற

☞2

## எமக்கு முழு அதிகாரம் இருந்திருந்தால் மாகாண தேர்தல் தாமதப்பட்டிருக்காது

### தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

மாகாண சபை தேர்தல் நடத்தப்படாமைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு காரணமல்ல. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அரச நிறுவனமாகவே தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளது. சட்டம் ஒன்று இன்றி ஆணைக்குழுவால் செயல்பட இயலாது. நாட்டின் தேர்தல்கள் குறித்து தீர்மானிக்கும் முழுமையான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருந்திருந்தால் மாகாண சபை தேர்தல் உட்பட எந்தவொரு தேர்தலும் தாமதப்படுத்தப்பட்டிருக்காது என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக பரிந்துரைக்கப்பட்டுள்ள மாகாண சபை தேர்தல் குறித்த பேச்சுகள் தேசிய அரசியலில் சூடுப்பிடித்துள்ள நிலையில், ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை தெளிவுப்படுத்தும்போதே ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபை தேர்தலை எப்படி நடத்தவேண்டும் என்பது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தெரியாது. நாடாளுமன்றத்தில் உள்ள 225 பேருக்கு மாத்திரம்தான் தேர்தலை எப்படி நடத்தவது என்று தெரியும். ஏனெனில் மாகாண சபை தேர்தலை எந்த முறைமையில் நடத்தவேண்டும் என்ற சட்டம் தற்போது நாட்டில் இல்லை.

அவ்வாறிருக்கும்போது தேர்தல்கள் ஆணைக்குழுவால் எவ்வாறு தேர்தலை நடத்த முடியும். குறிப்பாக மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று இன்று கோஷமிடுபவர்கள் 2018 ஆம் ஆண்டில் இருந்து தேர்தலை ஒத்திவைக்கவே நடவடிக்கை எடுத்திருந்தனர். எனவே ஆணைக்குழுவால் ஒன்று செய்ய இயலாது.

தேர்தலை அவசரமாக நடத்த வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் பிரேரனை ஒன்றை

☞2

# வீடுகள் அல்ல வெற்று காகிதமே மலையக மக்களுக்கு கையளிப்பு

## விளம்பர நாடகம் என ஜீவன் தொண்டமான் கடும் விமர்சனம்

மலையக மக்களுக்கு 4,700 வீடுகளை இந்திய அரசின் நிதியில் நிறுவுவதற்கான வீட்டு ஆவணங்களை வழங்கும் நிகழ்வு ஆளும் தரப்பினால் நேற்று நடத்தப்பட்ட நிலையில்,



கையளிக்கப்பட்டவை வீடுகளல்ல வெறும் காகிதங்களே என்று கடுமையாக விமர்சித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஜீவன் தொண்டமான்.

'இன்று வழங்கப்படும்

☞2

## பொருந்தோட்ட தொழிலாளர் சம்பளம் இந்த வருடத்திற்குள் 1700க்கு உயரும்

### அரசுத் தலைவர் நேற்று வாக்குறுதி

பெருந் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளத்தை 1700 ரூபாவாக இந்த வருடத்திற்குள் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்துள்ளார்.

பண்டாரவளையில் நேற்று இடம்பெற்ற மலையக மக்களுக்கு 2000 வீடுகளை வழங்குவதற்கான ஆவணக் கையளிப்பு நிகழ்வில் கலந்து

☞2

## ஊழல் விசாரணை ஆணைக்குழு பணிப்பாளர் மீது கலக்கமடைந்த ஊழல்வாதிகள்தான் குற்றச்சாட்டு

### பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிப்பு

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தின் பிரகாரம் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் ஊழல்வாதிகள் கலக்கமடைந்து அவர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். அரச நிதியை மோசடி செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சகள் உட்பட கடந்தகால ஊழல்வாதிகளின் ஊழல் மோசடிகள் வெளிவரும்போது பல ஊழல்வாதிகள் தற்போது அச்சமடைந்து கலக்கமடைந்துள்ளார்கள். அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழு கடுமையான

☞2

## அமைச்சரவை மாற்றத்தின் வர்த்தமானி வெளியானது

ஆளும்தரப்பின் முதல் அமைச்சரவை மாற்றத்திற்கமைய புதிய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் பதவிகள் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசுத் தலைவரின் செயலாளர் குமநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் சனிக்கிழமை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 10 காலை அரசுத் தலைவர் செயலகத்தில் நடைபெற்ற அமைச்சரவை மறுசீரமைப்புக்கமைய மூன்று புதிய அமைச்சர்களும் 10 பிரதி அமைச்சர்களும் அரசுத் தலைவர் முன்னிலையில் பதவியேற்றனர்.

அதற்கமைய போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள்

☞2

## நீர்த்தேகத்திலிருந்து தோட்டாக்கள் மீட்பு

மொரகஹகந்த நீர்த்தேகத்திலிருந்து துப்பாக்கிகளுக்கான தோட்டாக்கள் உட்பட வெளிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நாட்களில் நிலவும் வறண்ட வானிலை காரணமாக மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்துள்ளது, மேலும் நீர்த்தேக்கத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த ஒருவர் வெடிமருந்துகள் அடங்கிய பையை கண்டு நாவுல பொலிஸாருக்கு தகவல் அளித்தார்.

அந்த செய்தியின் பேரில் செயல்பட்ட நாவுல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் அவரது குழுவினர், வெடிமருந்துகள் அடங்கிய நீர்த்தேகத்திலிருந்து வெளியே

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தடவை ஆசிரியர் சங்கங்களுக்குள்ளேயே முட்டல்கள், மோதல்கள், விரிசல்கள், உரசல்கள் எல்லாம் உருவாகியிருக்கின்றன. இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கும் ஆசிரியர் சேவைச் சங்கத்திற்கும் இடையில்தான் இந்த நிலமை தோன்றியிருக்கின்றது.

ஆசிரியர் சேவைச் சங்கம் என்பது தற்போதைய ஆளும்தரப்பான என்பிபியின் முதுகெலும்பான ஜேவிபியின் தொழிற்சங்கம். இலங்கை ஆசிரியர் சங்கம் ஒப்பீட்டு ரீதியில் அதிகளவு உறுப்பினர்களைக் கொண்ட சங்கம். அண்மையில் இந்தச் சங்கம் வடக்கு மாகாணக் கல்வியில் அரசியல் தலையீடு அதிகமாகிவிட்டது என்று ஒரு அறிக்கை விட்டது. சங்கத்தின் செயலாளரான ஜோசப் ஸ்ராலின் இந்த அறிக்கையை விடுத்திருந்தார். அதன் பின்னர் சங்கத்தின் துணைத் தலைவரான தீபன் திலீசனும் செய்தியாளர்கள் சந்திப்பு நடத்தி இத்தகைய குற்றச்சாட்டைத் தெரிவித்திருந்தார்.

முக்கியமாக ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதாவது அடுத்தவருடத்திற்கானஆசிரியர்இடமாற்றத்தில் அரசியல்தலையீடுஅதிகரித்து விட்டது என்கிற முதலைக்கண்ணீராகஅதுஇருந்தது. ஆனால் ஆசிரியர் சேவைச் சங்கம் இதற்கு மறுத்தான் விட்டுள்ளது. நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அந்தச் சங்கத்தின் வடமாகாணச் செயலாளரான பிரகாஸ், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அறிக்கை சுயநலத்தின் பாற்பட்டது என்று விமர்சித்துள்ளார்.

“தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் தொடர்புடைய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கிய பதவியாளர் ஒருவர் தனது சகோதரிக்காக தன்னிச்சையாகச் செயல்பட்டு, பொய்யான கருத்துகளைப் பரப்பி ஆசிரியர்களை தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளார். இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான செயல்கள் வடமாகாண கல்வியை சீரழிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கல்வி அமைப்பின் நம்பகத்தன்மையை பாதிக்கப்படுகிறது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின்பிரதிநிதிஒருவர்தனதுசகோதரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கோரிக்கை விடுத்து, முரண்பட்ட நிலையில் இடமாற்ற சபையிலிருந்து வெளிநடப்பு செய்தது கவலைக்குரியது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைவிட குடும்ப நலனை முன்னிலைப்படுத்தும் இவ்வாறானசுயநலநடவடிக்கைகளைஎங்கள் சங்கம்வன்மையாகக்கண்டிக்கிறது. எனவே, வடமாகாண ஆசிரியர்கள் தங்களுக்கான நியாயங்களை உரிய வழிமுறையில் பெற்றுக்கொள்ளவும், சுயநல அரசியல் செயற்பாடுகளுக்கு ஆதரவாகச் செல்லாமல் விழிப்புடன் செயற்படவும்” என்று அவர் பொரிந்து தள்ளினார்.

ஊர் இரண்டுபட்டால் அதில் புகுந்து கிண்டிக் கிளறவேண்டியது எங்களைப் போன்றவர்களின் வேலைதானே. அதனால் என்ன, ஏது என்று விசாரித்தேன். கல்வி நிர்வாகத் தரப்புத் தகவல்களின்படி, ஆசிரியர் இடமாற்றச் சபையின் கடைசிக் கூட்டத்தில் இருந்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்தது உண்மைதான். சபையின் கூட்டத்தில் பங்குபற்றியதற்கான ஆதாரமாகப் பதிவேட்டில் கையெழுத்திடமாட்டோம் என்று நிராகரித்துவிட்டுவேறு கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்வது இடமாற்றச்சபையின் முடிவுகளைத் தமது சங்கம் அங்கீகரிக்கவில்லை, ஏற்கவில்லை என்று சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதற்காக. அதேநேரம் அந்தக் கூட்டத்தில் ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் இருந்தனர்.

அது போகட்டும் அறிக்கைகளில் அடிபடும் சகோதரிக் கதை என்ன என்பதையும் துளாவினேன். கடந்த ஆண்டு ஆசிரியர் இடமாற்றம் வழங்கப்பட்டவர்களில் பலர் வடக்குமாகாணஆளுநருக்குமேன்முறையீடு செய்துள்ளனர். அவர்களில் மருத்துவக் காரணங்கள் இருப்பதாக நம்பப்பட்ட பலருக்கும் இடமாற்றங்களுக்கான பதிலீடுகள், நிவாரணங்கள் வங்கப்பட்டுள்ளன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இது தொடர்பானவிவரங்கள்தொழிற்சங்கத்தினரால் பெறப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில் தொழிற் சங்கப் பிரதிநிதியின் சகோதரியும் மனைவியும்கூட அடுத்த ஆண்டு இடமாற்றப் பட்டியலில் சிக்கிக்கொண்டனர். அவர்களில் மனைவியின் கணவருக்கு மருத்துவ அறுவைச் சிகிச்சையைக் காரணம்காட்டி, ஆளுநர் மருத்துவக் காரணங்களுக்காக இடமாற்ற நிவாரணம் வழங்கியதுபோன்று தனது சகோதரிக்கும் இடமாற்ற நிவாரணம் வழங்கப்படவேண்டும் என்று சங்கப் பிரதிநிதி வாதாடியிருக்கிறார்.

சம்பந்தப்பட்டவர் அவரது சகோதரியாக இருந்தாலும் சட்டப்படி ஓர் ஆசிரியர் என்பதால் வாதாடுவதுஅவரதுஉரிமை.அதில்தவறில்லை. அவரதுவாதங்களின்அடிப்படையில்தங்களால் வழங்கக் கூடிய நிவாரணத்தை இடமாற்றச் சபையும் வழங்கியுள்ளது. அதாவது இடமாற்றக் கொள்கைக்குப் பங்கமில்லாத வகையில் இடமாற்றமும் செய்யப்பட்டதாக இருக்கவேண்டும், அதேநேரம் அவரது சகோதரிக்கு ஆக்கக் குறைந்த போக்குவரத்துத் தூரமும்இருக்கவேண்டும்என்றவகையிலான ஒரு பாடசாலையை வழங்கியிருக்கிறார்கள். முதலில் தூர இடத்திற்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை மாற்றியே இந்த நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அது போதாது என்று சங்கப் பிரதிநிதி கூட்டத்திலிருந்துவெளிநடப்புச்செய்திருக்கிறார். அவரது வாதம் எல்லாம் ஆளுநர் சொன்னவுடனே மருத்துவக் காரணங்கள் என்றுஇடமாற்றநிவாரணம்வழங்கமுடிகிறது, ஆனால் தொழிற்சங்கம் சொன்னால் அதைச் செய்ய முடியாதா என்பதுதான். இங்கு தொடங்கிய பிரச்சினைதான் பின்னர் வடக்கு கல்வியில் அரசியல் தலையீடு என்பதாக அறிக்கைகளில் வளர்ந்து விரிந்துள்ளது.

இந்த நிலையில், இதுவரையில் மற்றவர்களது ஆட்சியில் கல்வியில் அரசியல் தலையீடுகள் என்று சொல்லிவந்த தம் மீதே குற்றச்சாட்டா என்று கொதித்தெழுந்துதான் தற்போதைய ஆளும்தரப்பு பங்காளிகளான ஆசிரியர் சேவைச் சங்கத்தினர் மறுப்பறிக்கைகளை விடுத்துள்ளனர். ஆக மொத்தத்தில் வடக்கில் கற்றலும் கற்பித்தலும் நடக்கிறதோ இல்லையோ ஆளும்தரப்பு எதிர்த்தரப்பு அரசியல் மட்டும் படஜோராக நடக்கிறது என்பது தெளிவாகிறது. இதன் மூலம் வடக்கில் கல்வி ஓங்கி வளரும் என்று நம்புவோமாக.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வீடுகள் அல்ல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆவணமானது வழக்கமாக பயனாளர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும், மேலும் வீடுகள் ஒப்படைக்கப்படும்போது ஒரு நிகழ்வு நடத்தப்படும். (அவை முடிந்ததும்) இந்நிகழ்வானது 2000 வீடுகளைக் கையளிப்பது அல்ல, 2000 காகிதத் தாள்களைக் கையளிப்பதை உள்ளடக்கிய ஒரு விளம்பர நிகழ்வு மாத்திரமே’ என்று அவர் தனது சமூக வலைத் தளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த காகித ஆவணம் வழங்கும் நிகழ்வுக்கு எந்த தேவைப்பாடுகளும் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த ஒரு வருடமாக மலையகத்தில் அல்லது மலையக சமூகத்திற்காக எந்த ஒரு வேலையும் செய்யப்படவில்லைஎன்றஉண்மையிலிருந்து பொதுமக்களைத் திசைதிருப்புவதற்கான தந்திரோபாயம் மட்டுமே இது எனவும் ஜீவன் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக வேதன அதிகரிப்பு இல்லை, வீடுகள் கட்டப்படவில்லை, அபிவிருத்திகள் ஏதும் இடம்பெறவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சரவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சராக பணியாற்றிய பிமல் ரத்நாயக்க அந்த பதவியில் இருந்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் நகர அபிவிருத்தி அமைச்சராக அன்றைய தினம் நியமிக்கப்பட்டார்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடமிருந்து நீக்கப்பட்ட துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு, முன்னர் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சராகப் பணியாற்றிய அனுரகருணாதிலகவிடம்வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், அனுர கருணாதிலக்கவிடம் இருந்து நீக்கப்பட்ட வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சானது பிரதி அமைச்சராகப் பணியாற்றி வந்த கலாநிதி எச்.எம். சுசில் ரணசிங்கவிடம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிரமுன்னர்எந்தஅமைச்சுப்பதவியை யும்வகிக்காதகௌசல்யா, தினிந்துசமன்குமார, நிஷாந்தஜெயவீரமற்றும்அர்காம்ஆகியோரும் பிரதி அமைச்சர்களாக பதவியேற்றிருந்த நிலையில்அவர்களதுபொறுப்புகள்தொடர்பிலும் இந்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெள யிடப்பட்டுள்ளது.

## எமக்கு முழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றினால் போதுமானது. ஆனால் இலங்கையின் தேர்தல்களின் புதிய முன்னேற்றங்கள் குறித்துப் பேசிவிட்டு மீண்டும் பழைமையான முறைமைக்கு செல்வதுஎதற்குஎன்பதைச்சிந்திக்கவேண்டும். மாகாண சபை தேர்தலை அவசரமாக நடத்தவேண்டும் என்பதற்காக மீண்டும் விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை குறித்து பேசுகின்றனர். அவ்வாறாயின் கலப்பு உறுப்பினர் விகிதாசார அல்லது புதிய தேர்தல் முறைமை குறித்து ஏன் பேச வேண்டும்.

எனவே மாகாண சபை தேர்தல் நடத்தப்படாமைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு காரணமல்ல. சட்டத்தைநடைமுறைப்படுத்தும் அரச நிறுவனமாகவே தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளது. சட்டம் ஒன்று இன்றி ஆணைக்குழுவால் செயல்பட இயலாது. நாட்டின் தேர்தல்கள் குறித்துத் தீர்மானிக்கும் முழுமையான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருந்திருந்தால் மாகாண சபைத் தேர்தல் உட்பட எந்தவொரு தேர்தலும் தாமதப்படுத்தப்பட்டிருக்காது என்றார்.

## நீர்த்தேகத்திலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், தொடர்புடைய வெடிமருந்துகள் யாரால் கொண்டுவரப்பட்டன, எந்தத் தினத்தில் கொட்டப்பட்டன என்பது தெரியவில்லை. கண்டுபிடிக்கப்பட்ட வெடிமருந்துகளில் வீ-56 வகை துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்களும், பிற கனரக ஆயுதங்களுக்குப் பயன்படுத்தப்படும் பலதோட்டாக்களும் உள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ஊழல் விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள்.

அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். ரக்பி வீரர் தாஜுதீனின் படுகொலை தொடர்பில் புதிய விடயங்கள் வெளியாகும் போது நாமல் ராஜபக்ச அச்சமடைந்து பொலிஸ் திணைக்களத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்.

பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தினார்கள். இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சியின் உறுப்பினர் சுஜீவ சேனசிங்க நாடாளுமன்றத்துக்கு பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார். இந்தப் பிரேரணையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அரசமைப்பின் ஊடாகவே பிரதமர் பதிலளித்தார். சுஜீவ சேனசிங்க முன்வைத்த குற்றச்சாட்டுக்கள்அனைத்தும்பொய்யானவை.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசியல்மயப்படுத்த வேண்டிய அவசியம் ஆளும்தரப்புக்கு கிடையாது. ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே ஒரு சில அதிகாரங்கள் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்படவுள்ளது. பொலிஸ் ஆணைக்குழுவின் சுயாதீனத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றார்.

## பொருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு அரசுத் தலைவர் இதனைக் கூறியுள்ளார்.

அதேநேரம் போதைப்பொருள் மற்றும் பாதாள உலக குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் இருந்து ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

200 வருடகாலமாக வாழும் ஒரு சமூகத்தினருக்கு குறைந்த பட்சம் சிறிய அளவிலான காணிகூட இல்லாமல் இருக்கின்றனர். எனவே அவர்களும் மகிழ்ச்சியுடன்வாழ்வதற்குஆளும்தரப்புஎன்ற வகையில் அவர்களது பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குக் கடமைப்பட்டுள்ளோம்.

தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமக்கு நாளாந்த சம்பளமாக 1700ரூபாவைவழங்குமாறுநீண்டநாட்களாக கோரி வருகின்றனர். இந்த வருடத்தில் அந்தத் தொகையினை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வறுமை, ஊட்டச்சத்து குறைபாடு, சுகாதார ரீதியான பாரிய பின்னடைவை மலையக மக்களே அதிகளவில் எதிர்நோக்கியுள்ளனர். எனவே அதில் கவனம் செலுத்தி சிறந்த சுகாதார சேவையினை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் நாட்டில் சுத்தமான குடிநீரை வழங்கபுதியதிட்டம்ஒன்றைமுன்னெடுப்பதற்கு எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் முக்கியத்துவம்வழங்கப்படும். வறுமைக்கும், கல்விக்கும் பெரும் தொடர்பு உள்ளது. எனவே மக்களை வறுமையில் இருந்து மீட்டு எடுப்பதற்கு சிறந்த கல்வி திட்டத்தை உறுதி செய்வோம்.

மலையக மக்களின் கௌரவம் அடிமட்டத்தில் உள்ளது என்பதை அறிவோம். எனவேஅவர்களதுகலாசாரத்திற்குமதிப்பளித்து அவர்களதுசமூகத்தைவளர்ச்சியடைவதற்குத் தேவையான அனைத்து பணிகளும் முன்னெடுக்கப்படும் என அரசுத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய கல்விச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முந்தைய இடையூறுகளால் இழந்த கல்வி நேரத்தை ஈடுசெய்வதன் மூலமும் கற்றல் சூழலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# தேயிலைக்கு உலகத் தங்க விருது கிட்ட உழைத்த தொழிலாளருக்கு என்ன விருது தரப்போகிறோம்?

## நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் கேள்வி



(சக்திவேல்)

உலகளவில் இலங்கையின் கறுப்புத் தேயிலைக்குத் தங்க விருதுகிடைத்திருப்பதாகவும், உலகளவில் கின்னஸ் புத்தகத்தில் அந்த சாதனை பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் பெருந்தோட்ட தொழில் துறை அமைச்சர் சமந்த வித்தியாரத்னபெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது பாராட்டத்தக்க விடயமாகும். ஏறத்தாழ ஒரு கிலோ தேயிலையின் விலை இரண்டு இலட்சத்துஅறுபதாயிரம் வரை காணப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இந்த வேளையில், அதற்காக உழைத்த மலையகத்தொழிலாளர்களின்நிலைமைபற்றிநாம்ஆழமாகச் சிந்திக்கவேண்டியுள்ளது. 200 ஆண்டுகளாக இந்நாட்டின்பொருளாதாரத்துக்காக அர்ப்பணித்த மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம்மோசமாகவேஉள்ளது. என இலங்கைத்தமிழரசுக்கட்சியின்மட்டக்களப்பு மாவட்டபாராளுமன்றஉறுப்பினர்ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

இவ்விடையம் குறித்து நேற்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலேயேஇவ்வாறுகுறிப்பிட்டுள்ளார். அதில் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது .பிரித்தானியர் ஆட்சியில், அமைக்கப்பட்ட லயன் குடியிருப்புகளில், அடிப்படைவசதிகள் குறைந்த நிலையில் வாழ்கின்றனர்.முதல் பிரதமர், தேசபிதா டி.எஸ்.சேனநாயக்க 1948, 1949 களில் மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமையைப் பறித்தார்.

பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ 1964 இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலமாக சுமார் 6 இலட்சம் மலையக மக்களை இந்தியாவுக்குப் பலவந்தமாக அனுப்பினார். 1958, 1961, 1964,1974, 1977, 1981, 1983 களில் இனவன்முறைகள் மூலமாக மலையகத் தமிழர்கள் பல நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டனர்.நாட்டுக்குப் பெருமை தேடிக்கொடுத்த மலையகத்தொழிலாளர்களின்வாழ்விடம், வாழ்க்கைத்தரம், சம்பளம், அவர்களுக்கான கணிப்பு, உரிமை என்பன இன்றும் குறைந்த மட்டத்திலே காணப்படுகின்றன. அவர்களால்ஏற்படுத்தப்படும்பொருளாதார அனுகூலங்களை அனுபவிக்கின்றோம்,மதிக்கின்றோம். அதனை ஈட்டித் தந்த தொழிலாளர்களை அதிகார மையமும், அவர்களது பரிவாரங்கமும் மிதிக்கின்றன.

இப்படியான சாபக்கேட்டினால் நாட்டின்பொருளாதாரம் 2023 இல் வங்குரோத்தானது. அதில் இருந்து இன்னும் நாடும், மக்களும் மீளவில்லை. உழைப்பவனுக்கு கஞ்சி உறிஞ்சுகின்றவனுக்கு கனதியான படையல் என்ற அநியாயம் உள்ள வரை இந்த நாட்டில் அபிவிருத்தியை எட்ட முடியாது. இதனைத் தற்போதுள்ளதேசிய மக்கள் சக்தி அரசாங்கமாவது உணர்ந்து செயலாற்ற வேண்டும். என அவர் தெரிவித்துள்ளார்.

## அரசடித்தீவு விக்கினேஸ்வரா ம. வித்தி. 115ஆவது ஆண்டு நிறைவு நடைபவனி



(சக்திவேல்)

மட்டக்களப்பு மாவட்டம் மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் 115 வது ஆண்டு நிறைவு விழா நடைபவனி ஒக்டோபர் 11 நடைபெற்றது.

இதன்போது அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் வீதி நுழைவாயில் பெயர் பலகை திரை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் நடைபவனி ஆரம்பமானதைத் தொடர்ந்து அரசடிதீவுலிருந்து கொக்கட்டிச்சோலை பிரதான வீதி ஊடாக மகிழடித்தீவு, பண்டாரியாவெளி, கடுக்காமுனை ஊடாக சென்று மீண்டும் பாடசாலையை வந்தடைந்தது.

இதன் போது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர்பங்குபற்றியிருந்தனர்.

## குச்சவெளி, கரடிமலைப் பகுதியில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்



(ஹஸ்பர்)

திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தின் 221ஆவது படைப் பிரிவின் புதிய இராணுவ கட்டளையிடும் அதிகாரி பொறுப்பேற்றதன் பின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டம் ஒக்டோபர் 11 முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கிளீன் ஸ்ரீலங்கா திட்டமானது சுற்றுலா பகுதியான குச்சவெளிகடற்கரையின் கரடி மலை பகுதியில் இடம் பெற்றது. இதன் போது குறித்தகரையோரப் பகுதியில் உள்ள பிளாஸ்டிக் பொருட்கள் உட்பட பல கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டது. இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் யூசூப் ரஹ்மான், இராணுவ அதிகாரிகள்,பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரிக்கு வீரமானிடர் விருது





(நூருல் ஹுதா உமர்)

தமதுயிரைப் பணயம் வைத்து பிற உயிர்களைக் காப்பாற்றிய வீரமானிடர்களை கௌரவிப்போம் எனும் தொனிப்பொருளில் பொதுமக்கள் வீர செயலுக்கான மன்றம் ஏற்பாடு செய்த 28 வது தேசிய வீரமானிடர் விருது விழா 2025 சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று பத்தரமுல்ல மிஹிகந்தமெதுர, காணிச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பேரிடரின் போது தமது உயிரைப் பணயம் வைத்து, உயிராபத்திலுள்ள மக்களைக் காப்பாற்றிய அல்லது காப்பாற்ற முனைந்த வீரமானிடர்களை பாராட்டும் விதமாக கடந்த ஆண்டு காரைதீவு மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தத்தில் 13 பேருடன் பயணித்த போது கவிழ்ந்த உழவு இயந்திரத்திலிருந்துஅவர்களைமீட்கபோராடியமைக்காக கிழக்கு பிராந்தியத்தில் முன்னோடி சமூக சேவை அமைப்புக்களாக திகழும் மாளிகைக்காடுஜனாஸா நலன்புரி அமைப்பு, சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பு,மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை ஆழ்கடல் சுழியோடிகள் நீரியல்வள மீனவர்கூட்டுறவுச் சங்கத்தினர், காரைதீவு ராவனா அமைப்பினர் ஆகியோர் வீரமானிடர் விருது பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பொதுமக்கள் வீர செயலுக்கான மன்றத்தின் இந்த விருது வழங்கும் விழா 28 வது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் பிரணவ ரூபன், அனர்த்த நிவாரண சேவை காரைதீவு பிரதேச உத்தியோகத்தர் சர்பின்,பொதுமக்கள் வீர செயலுக்கான மன்ற உறுப்பினர்கள், மத போதகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் தீயில் பொசுங்கிய வீடு

(பர்ஸான்)

மட்டக்களப்பு மாவட்டம் - சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரகல்லிமடுபிள்ளையார் கோயில் வீதியிலுள்ள வீடொன்று தீப்பிடித்துசாம்பலாகியுள்ளது.இந்த சம்பவம் வீட்டில் பயன்படுத்திய எரிவாயு கசிவு காரணமாகஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த தீ சம்பவத்தில் குடிசை வீடும், அங்கிருந்த பொருட்களும் முற்றாகஎரிந்து சாம்பலாகியுள்ளன.குறித்த இடத்துக்குச் சென்ற வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமாமான கமலநேசன் பாதிக்கப்பட்டகுடும்பத்திற்கு ஆறுதல் கூறி, உலருணவுப் பொருட்களை வழங்கி வைத்தார்.இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கடன் நிழலில் தவிக்கும் இலங்கை

ஒரு வருடம் கடந்தபோதும் இலங்கையின் தேசிய மக்கள் சக்தி (NPP) ஆளும்தரப்பு தன் திசையையே கண்டடையாமல் திணறும் நிலை இன்று வெளிப்படையாகப் புலப்படுகிறது. மக்கள் பேராதரவுடன் "புதிய அரசியல்" என்ற முழக்கத்துடன் ஆட்சிக்கு வந்த ஆளும்தரப்பு இன்று தன்னால் உண்டான பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கிறது.

ஊழலை ஒழிப்போம், புதிய பொருளாதாரத்தை உருவாக்குவோம், வெளி நிதி நிறுவங்களை நம்பாமல் நாட்டு சுயாதீனப் பாதையை அமைப்போம் என்ற வாக்குறுதிகள் அனைத்தும் வெறும் முழக்கங்களாக்கிவிட்டன.

### எதிர்ப்பும் சரணாகதியும்

ஆட்சியில் அமர்ந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) ஒப்பந்தத்தை மறுபடியும் எழுதுவோம் என வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி இன்று அதே ஒப்பந்தத்தின் பணிவான பின்தொடரியாக மாறி உள்ளது. இதன் விளைவாக ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே உள்ளூராட்சி தேர்தலில் அவர்களின் வாக்குகள் 20 லட்சத்திற்கும் மேல் சரிந்தன.

சொன்னதொன்றும் செய்ததொன்றும் மாறுபட்ட நிலையில், ஆளும்தரப்பின் நம்பகத்தன்மை சரிந்துவிட்டது.

### நம்பிக்கை இன்றி தள்ளாட்டம்

முதலீட்டாளர்கள் நம்புவது நிலைத்தன்மையும் நம்பிக்கையும்தான். ஆனால் ஆளும்தரப்பு தன் கொள்கைத் திசையைத் தாறுமாறாக மாற்றியதால், இன்று இலங்கையின் சொல் உலகளவில் மதிப்பிழந்துள்ளது.

அதோடு, அமைச்சர்களைச் சுற்றிய குற்றச்சாட்டுகள், பொறுப்பற்ற முடிவுகள், மற்றும் அரச நிறுவனங்களின் அரசியல் தலையீடுகள் என்பன பொதுமக்களின் மனதில் கடும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

சமீபத்திய அமைச்சரவை மாற்றம்கூட இதுவரை ஏற்படுத்தப்பட்ட சேதத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி போலவே தோன்றுகிறது.

323 கப்பல் கொள்கலன்கள் சோதனையின்றி வெளியிடப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அதனை மறைக்க இதுபோன்ற மாற்றம் நிகழ்ந்ததாக விமர்சனம் எழுந்துள்ளது.

உலக வணிக அமைப்புக் கூட்டத்தில் ஒரு சாதாரண பொது உறவாளர் அதிகாரியை அழைத்துச் சென்ற வர்த்தக அமைச்சர் மீதும் மக்கள் அதிருப்தி காட்டுகின்றனர்.

### சுயாதீன அமைப்புகளில் அரசியல் திணிப்பு

சமூக ஊடக விமர்சகர்களை மிரட்டுதல், குற்றப்புலனாய்வு துறையை (CID) அரசியல் கருவியாகப் பயன்படுத்துதல், லஞ்ச ஒழிப்பு ஆணையம் மற்றும் காவல் துறை போன்ற சுயாதீன அமைப்புகளை கட்டுப்படுத்துதல் போன்ற நிகழ்வுகள் பழைய அரசியல் களங்கங்களை மீண்டும் நினைவூட்டுகின்றன.

மாற்றம் பெயரில்தான் — நடைமுறையில் பழைய அரசியல்தான் தொடர்கிறது.

அமைச்சர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றி "வெளிநாட்டு முதலீடு பெருகி வருகிறது" எனக் கூறினாலும் உண்மை அதுவல்ல.

உலக வங்கியின் சமீபத்திய அறிக்கை இலங்கையின் பொருளாதார உண்மையை வெளிப்படையாகக் காட்டுகிறது.

வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) தற்போது உள்நாட்டு உற்பத்தியின் 0.5% மட்டுமே — பிராந்திய சராசரியான 1.5% ஐயும், மலேசியா, வியட்நாம் போன்ற நாடுகளின் 3% ஐயும் ஒப்பிடும்போது இது மிகக் குறைவு.

### முதலீட்டை தடுக்கும் குழப்பம்

உலக வங்கியின் நிபுணர்கள் குறிப்பிட்டுக் காட்டுவது, அமைச்சகங்களின் ஒத்துழைப்பு இல்லாமை, நிர்வாகக் குழப்பம், பழைய தொழிலாளர் சட்டங்கள் ஆகியவையே வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முன்னுள்ள முக்கிய தடைகள்.

நம்பிக்கையை உருவாக்க வேண்டிய இடத்தில், ஆட்சியினர் அடக்குமுறையை காட்டுவதால் முதலீட்டாளர்கள் நாட்டிலிருந்து விலகி செல்கின்றனர்.

மக்கள் விமர்சனங்களைச் சொல்லும்போது, ஆளும்தரப்பு அதனை ஏற்காமல் அடக்குமுறையைக் கடைப்பிடிக்கிறது.

இது அச்சத்தையும் பலவீனத்தையும் வெளிப்படுத்துகிறது. முதலீட்டாளர்கள் இதை அரசியல் அபாயமாகப் பார்க்கிறார்கள்.

ஓர் அரசு விமர்சனத்தைப் பார்த்துப் பயப்படுகிறதென தெரிந்தவுடன், முதலீட்டாளர்களின் நம்பிக்கை உடனே சரிந்து விடுகிறது.

### நம்பிக்கையற்ற நாட்டும்

இன்றைய உலகில் செயற்கை நுண்ணறிவு (AI) அரசியல் தரவுகளையும் ஊழல் அளவுகளையும் கண்காணிக்கிறது.

ஆட்சியின் நெறிமுறை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு ஆகியவை முதலீட்டு முடிவுகளை தீர்மானிக்கின்றன.

இதனால்தான் இலங்கை இன்னமும் உலக நிதி ஓட்டத்திலிருந்து புறக்கணிக்கப்படுகிறது. நம்பிக்கையை உருவாக்க பல வருடங்கள் ஆகும்; ஆனால் அதை அழிக்க சில வாரங்களே போதும்.

### தவறான நம்பிக்கை

அரசுத் தலைவர் அநுரகுமார நாணய நிதியத்தை "நாட்டின் பங்குதாரர்" என இப்போது வர்ணிக்கிறார். ஆனால் நாணய நிதியம் வளர்ச்சிக்கான பங்குதாரர் அல்ல — அது கடன் வழங்கும் அவசர நிதியமைப்பு மட்டுமே. அதனை மீதான நம்பிக்கையுடன் முழு பொருளாதாரத்தையும் கட்டமைப்பது நாட்டின் சுயாதீனத்தை குறைக்கிறது.

நாணய நிதியக் கடன் கிடைத்த அதே வாரத்தில் உலக வங்கி கூறியது: "இலங்கையின் பொருளாதார மீட்பு இன்னும் முழு பெறவில்லை" என்கிற கருத்தைத்தான்.

உணவுவிலைகள் உயர்ந்துள்ளன, வெளிநாட்டுகையிருப்புகள் குறைந்துள்ளன.

இந்நிலையில், இலங்கைக்கு தேவைப்படுவது புதிய பேச்சுகள் அல்ல — நம்பகத்தன்மை.

அது அறிவிப்பதனால் உருவாகாது; நடத்தையின் மூலம்தான் பெறப்படும்.

அரசியல் நேர்மை, கொள்கை தொடர்ச்சி, வெளிப்படைத்தன்மை ஆகியவை சேர்ந்துதான் நம்பிக்கையை உருவாக்கும்.

தேசிய மக்கள் சக்தி அரசு இவற்றில் எதையும் உறுதியாகக் கடைப்பிடிக்காத வரை, மக்கள் நம்பிக்கையும், முதலீட்டாளர் நம்பிக்கையும் திரும்ப வராது.

நம்பகத்தன்மைதான் ஒரு நாட்டின் உண்மையான நாணயம்.

அது இல்லையெனில் பொருளாதார வளர்ச்சியும் அரசியல் நிலைத்தன்மையும் வெறும் மாயைதான்.

# செல்வபுரத்தில் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க பொலீஸ் முன்னாள் ஊழியர்கள் உதவி

(சகா தேவராஜா)

பொத்துவில் கோமாரி, செல்வபுரம் கிராமத்தில் மிக நீண்ட காலமாக நிலவிவரும் குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொலிஸ் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற ஊழியர்கள் உதவிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன் அங்குரார்ப்பண விழாவில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்ற



உறுப்பினர் அப்துல் வாஸித் ,பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனரத் ஆகியோர் அதிதிகளாக கலந்து



சிறப்பித்தனர்.பொலிஸ் திணைக்களத்தின் ஓய்வு நிலை ஊழியர்களின் நிதியினூடாக அமைக்கப்பட்ட 5000 லீட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் தொகுதி மக்கள் பாவனைக்காக ஒக்டோபர் 10 பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவினால் திறந்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் , அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# முதற் பெண் மாவீரர் மாலதியின் 38 ஆம் நினைவேந்தல் லண்டனில்

(சகா தேவராஜா)

முதல்பெண்மாவீரர் 2ஆம் லெப். மாலதியின் 38 ஆம் ஆண்டு நினைவு நாளும் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளும் பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் இலண்டன் வடமேற்கு பகுதியில் நினைவு கூரப்பட்டது.

இந்த உணர்வு பூர்வமான நிகழ்வு ஒக்டோபர் 10 வடமேற்கு இலண்டன் பகுதியில் நடைபெற்றது. பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் நினைவுகூறப்பட்ட இந் நிகழ்வில் பெருந்திரளான உணர்வாளர்கள் வரிசையாக வந்து அஞ்சலி செலுத்தினர்.அத்துடன் 'சூரிய புதல்விகள்' பாகம் 02 பாடல் வெளியீட்டு விழாவும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.




# இந்திய கடற்தொழிலாளர்களை கைது செய்ய மட்டுமே முடியும்

## வடக்கு கடற்படைத் தளபதி தெரிவிப்பு

இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த எங்களால் முடியாது அவர்களை கைது செய்ய மட்டுமே முடியும். அவர்களை கைது செய்து, மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்தொழில் நீரியல் வளத்துறையினரிடம் கையளிப்பதுடன் எங்கள் கடமை முடிந்து விடும் என வடக்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் புத்திக லியனகமகே தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்படை முகாமில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துவது எமக்கு சவாலானது. கடற்படை படகுகளுக்கான எரிபொருள் அதிகளவில் தேவைப்படும். அதனால் எரிபொருள் சிக்கல்களை எதிர்கொள்கின்றோம் கடற்படையினர் ஒரு டோரா படகில் போனால் , இந்திய மீனவர்கள் 50 - 100 படகுகளில் பெருமெடுப்பில் வருவார்கள். கடற்படையின் படகினை கண்டதும் இந்திய எல்லைக்குள் ஓடி விடுவாங்க. எங்களால் துரத்தி பிடிக்க முடிந்தளவு படகையும் மீனவர்களையும் கைது செய்கிறோம்.



எங்களால் மீனவர்களை கைது செய்ய மட்டும் தான் முடியும். கைது செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்த கடற்தொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைப்போம். அதனை மட்டுமே கடற்படையால்ட்டுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். உள்ளூர் மீனவர்களின் ச செய்ய முடியும்.இந்திய மீனவர்கள் விடயத்தில் அரசாங்கம் எமக்கு எந்த அழுத்தமும் தருவதில்லை. இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் போன்றே , உள்ளூர் மீனவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளையும் கட்டவிரோத செயல்களை தனியே கடற்படை மாத்திரம் தடுக்க முடியாது. அதற்கு மக்களின் சமூகத்தின் ஒத்துழைப்பு கட்டாயம் தேவை எனவும் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து சென்ற

# இயந்திரப் படகு மூழ்கியது கடலில் 3 மீனவர்களும் பாதுகாப்பாக மீட்பு

(பர்ஸான்)

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 273 எம்.டி.ஆர் இலக்கமுடைய இயந்திரப் படகொன்று ஒக்டோபர் 10 கடலில் மூழ்கியுள்ளது.வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து ஒக்டோபர் 04 ஆம் நாள் மூன்று மீனவர்கள் மீன் பிடிப்பதற்காக இயந்திரப் படகில் ஆழ் கடலுக்குச் சென்றுள்ளனர்.

மூவரும் மீன்களைப் பிடித்து விட்டு வலைகளை படகில் ஏற்றும் போது பாரிய அலையில் சிக்குண்டு படகு கடலில் மூழ்கியுள்ளது. குறித்த கடற்பரப்பில் மற்றொரு படகில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்கள் கவிழ்ந்த படகிலிருந்த மூன்று மீனவர்களையும் பாதுகாப்பாக மீட்டு நேற்று கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்த படகு விபத்துச் சம்பவம் வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து சுமார் 103 கிலோ மீற்றர் தொலைவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.வாழைச்சேனையை சேர்ந்த படகு உரிமையாளர் அலீம் படகு விபத்துச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், துறைமுக அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அப்துல் கலாம் ஞாபகார்த்த கணிதப் போட்டிப் பரீட்சையும் கணித ஆய்வுகூடத் திறப்பும்



(கேதீஸ்)

டாக்டர் அப்துல் கலாம் ஞாபகார்த்த கணிதப் போட்டிப் பரீட்சையும் கணித ஆய்வு கூட திறப்பு விழாவும் ஒக்டோபர் 11 கலாம் எண்ணியல் மன்றத்தின் ஏற்பாட்டில் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அதிபர் கமலதர்ஷினியின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா கல்வி வலயத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிகல்வி பணிப்பாளர் கணேஸ்ராஜ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நுவரெலியா கல்வி வலய கோட்டம் இரண்டில் உள்ள தரம் 11 பாடசாலை மாணவர்களுக்கிடையே இப்போட்டி நடைபெற்றது. இப்போட்டி நிகழ்ச்சிகளில் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் முதலாம் இடத்தையும் , கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும், கேம்பிரிட்ஜ் கல்லூரி மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற கணித வினாடி வினா போட்டியிலும் தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயம் வெற்றி வாகை சூடியதுடன் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பிரதி கல்வி பணிப்பாளர் கணேஸ்ராஜ் சான்றிதழ்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

## சாய்ந்தமருதில் மனநல விழிப்பூட்டல்

(நூருல் ஹுதா உமர்)

உலக மனநல தினத்தினை முன்னிட்டு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் பெண்களுக்கான விழிப்பூட்டும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி பிரிவின் உதவியாளர் ஜஃபரின் நெறிப்படுத்தலில் தலைமை பீட முகாமையாளர் நஜீம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் றியாத், கருத்திட்ட முகாமையாளர் றிபாயா, சிரேஷ்ட மனநல ஆலோசகரும் சமுர்த்தி கருத்திட்ட உதவியாளருமான நௌஸாத், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஷர்பீன், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் முஸ்பீரா ஆகியோர் கலந்து கொண்டனர்.உலக மனநல தினத்தினை பற்றிய விரிவுரையினை மனநில உத்தியோகத்தர் சியாம் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

## சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ சித்திகள் பெற்ற சம்மாந்துறை வலய மாணவர்களுக்கு கௌரவம்




(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்வி பிரிவின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரத்தில் 9ஏ சித்திகள் மற்றும் க.பொ.த. உயர்தரத்தில் 3ஏ சித்திகளை பெற்ற சம்மாந்துறை வலய மாணவர்களையும் பெற்றோர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு ஒக்டோபர் 10 சம்மாந்துறை மஜீட் மண்டபத்தில் பிரதேச சபை தவிசாளர் மாஹிர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவர் ரிஷாட் பதியுதீன், கட்சியின் தேசிய அமைப்பாளர் அஷ்ரப் தாஹிர், சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர், மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் ரிஸ்லி முஸ்தபா உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



## நிந்தவூர் சாதனையாளர்கள் கௌரவிப்பு



(ஸாகிர்)

அகில இலங்கை பாடசாலை ரீதியாக நிந்தவூரில் நடாத்தப்பட்ட கபடிப் போட்டியில் 20 வயது ஆண்கள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற அல் அஷ்ரக் தேசிய பாடசாலை மற்றும் 17 வயது ஆண்கள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற அல் மதீனா தேசிய பாடசாலை மாணவர்கள் தார்மீக சமூகத்துக்கான சமூக விழிப்புணர்வு அமைப்பினால் (சம்ஸ்) கௌரவிக்கப்பட்டனர்.

தார்மீக சமூகத்துக்கான சமூக விழிப்புணர்வு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரம்மாண்டமான இந்நிகழ்வை அமைப்பின் தலைவர் ஜனுபர் தலைமை தாங்கி நடத்தி இருந்தார். இந் நிகழ்வில் பிரதம அதிதியாக நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி அப்துல் லத்தீப், கிழக்கு மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் முஹம்மத் சுஃபியான் ஆகியோர் கலந்து கொண்டதோடு, விசேட அதிதியாக நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் அஸ்பர் மற்றும் கல்முனை கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் சாஜித் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், தங்கம் வென்ற அத்தனை மாணவர்களுக்கும் சிரேஷ்ட வீரர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, பிரதம அதிதிகளுக்கும் பொன்னாடை போத்தி நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# முத்து நகர் விவசாயிகள் சத்தியாக்கிரகம் தொடர்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை முத்து நகர் விவசாயிகள் தங்களின் அபகரிக்கப்பட்ட விவசாயத்தை நிலத்தை மீளப்பெற்றுத்தரக் கோரிய தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தைநேற்றுடன் 26ஆவது நாளாகதிருகோணமலைமாவட்டசெயலகம் முன்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

அகில இலங்கை விவசாய சம்மேளனம், மக்கள் போராட்ட முண்ணனியின் செயற் குழுஉறுப்பினர் வசந்த முதலிகேவும் விசேடமாக குறித்த விவசாயிகளுக்காகஆதரவுதெரிவித்துவரும் நிலையில்இவ்சத்தியாக்கிரகப்போராட்டத்தில் இணைந்துள்ளனர். பிரதமரினால் வழங்கப்பட்ட இரண்டாம் கட்ட தீர்வுக்காக இன்னும்08 நாட்களேஉள்ளனவு எனவும் குறித்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.




அதேவேலைமுத்துநகர்பகுதியில்சூரிய மின்சாரத்துக்கு அபகரிக்கப்பட்டகாணியை விடுத்து அண்மையில் உள்ள காணிக்குள் உழவு இயந்திரத்தை கொண்டு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட சுமார் 09 விவசாயிகளை சீனக்குடா பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனால் இம் மக்களின் வாழ்வாதாரம் தொடர்ந்தும் போராட்டங்களுடனேயை செல்வதாக விவசாயிகள் கவலைதெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னர் தங்களது காணியை பெற்றுத்தரக்கோரிய போராட்டங்களை நடாத்தியபோதிலும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸாரினால் இதற்குமுன்னர் ஐந்து விவசாயிகள் கைது செய்யப்பட்டு சிறையில் சுமார் 14 நாட்கள்அடைக்கப்பட்டு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.திருகோணமலைமாவட்டசெயலத்தில்இடம் பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின்போது முன்னுக்கு பின்னுக்கு முரணான கருத்தாக சூரிய மின் சக்திக்காகதனியார் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட காணிகளை விடுவிப்பதா இல்லையா தொடர்பானகருத்துக்களையே ஆளும் தரப்பு எம்.பிக்கள் கூறுவருவதாகவும்தெரிவிக்கின்றனர்.

சுமார் 800 ஏக்கரில் தற்போது வரைக்கும் 200 ஏக்கரளவில்சூரிய மின் சக்தி திட்டத்துக்கான வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள இரு குளங்களை மூடி இதனை முன்னெடுப்பதாகவும்விவசாயிகள்தெரிவிக்கின்றனர்.




வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

# களுதவளை மாணவன் புதிய சாதனை

(சக்திவேல்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டியில்மட்டக்களப்பு மாவட்டம்பட்டிப்புகல்விவலயத்திற்குட்பட்ட களுதாவளை மகாவித்தியாலயம் தேசிய பாடசாலையைச் சேர்ந்த குகன் பகிர்ஜன் என்ற மாணவன் 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் கலந்து கொண்டுபுதிய சாதனையைப் படைத்துமுதலிடத்தைப்பெற்றுக் கொண்டுள்ளதாதாக பாடசாலைநிருவாகம் தெரிவித்துள்ளது.



இவருடன் போட்டியிட்ட ஏனைய மாணவர்களை வீழ்த்தி 1.98 மீற்றர் உயரம்பாய்ந்து இலங்கையில் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில்புதிய சானையைப் பதடைத்துள்ளார். இப்போட்டிகள் நேற்று தியகம மஹிந்த ராஜபக்ஸ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈச்ச நகர் பகுதியில் தொடர்ந்தும் காட்டு யானைகளின் தாக்கம்



(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பகுதியில் தொடர்ந்தும் காட்டு யானைகளின் தொல்லையால் தாங்கம்பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று ஈச்சநகர் குளத்தை அண்டியபகுதியில் ஊருக்குல் புகுந்த காட்டு யானை பயிர்களையும் உடைமைகளையும்சேதத்துக்குள்ளாக்கிவிட்டுசென்றுள்ளதாகவும் அப் பகுதி மக்கள்தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியில் உள்ள ஈச்ச நகர் குளத்தின் வழியாக காட்டு யானைகள்அதிகம்ஊருக்குல்படையெடுக்கின்றதுஎனவும் பாதுகாப்பான யானை வேலிஇன்மையால் இரவில் நிம்மதியாக தங்கள் பிள்ளைகளுடன் தூங்க முடியாத நிலைகாணப்படுவதாகவும்தெரிவிக்கின்றனர். இதனால் தங்களின் காணிக்குள் உள்ள தென்னை,பலா,வாழை போன்ற சுமார் 15 க்கும் மேற்பட்ட பயிரினங்களை துவம்சம் செய்துள்ளதாகவும் அப் பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே இக் காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து அச்சமின்றி வாழக் கூடிய சூழ் நிலைகளை ஏற்படுத்தி தருமாறு உரிய அதிகாரிடம் கோரிக்கைவிடுக்கின்றனர்.

# வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்த தந்தைக்கும் மகனுக்கும் தண்டம்

## தாமரக்குலிய பகுதியில் சம்பவம்

(சியாஜ்)

தங்கொட்டுவ, தாமரக்குலிய பகுதியில் வசிக்கும் தந்தை மற்றும் மகன் ஆகியஇருவரும் தமது வீட்டிற்குள் சட்டவிரோதமாக கசிப்பு மதுபான ஆலை நடத்தி வந்தமைக்காக இருவருக்கும் மாரவில மேலதிக மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதிதினிது சமரசிங்க நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா அபராதம்விதித்துள்ளார்.

சந்தேகத்திற்குரிய தந்தை மற்றும் மகன் இருவரும் தங்கள் வீட்டில் கசிப்புமதுபான ஆலை நடத்தி வருவதாக வென்னப்புவ உதவி காவல் கண்காணிப்பாளர்சண்திமல் விஜேசிங்கவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், தங்கொட்டுவகாவல்துறையின் ஊழல் தடுப்புப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்டஅதிகாரிகள் குழு சோதனை நடத்தியது. சோதனையின் போது, இரண்டு சந்தேகநபர்களையும் கைது செய்த காவல்துறை அதிகாரிகள் கசிப்பு மற்றும் கசிப்புஉற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களையும் பறிமுதல் செய்தனர். சந்தேக நபர்களை தங்கொட்டுவ காவல்துறையினர் நீதிமன்றத்தில் ஆஜர்பட்டு அபராதம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது


உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir



# ஹமாஸ் ஆயுதங்களை களையுமா? இஸ்ரேல் ஆக்கிரமிப்பை தொடருமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

தற்போது காசாவில் போர் நிறுத்தம் ஆரம்பமாகிய நிலையில், இஸ்ரேலியர்கள் பணயக்கைதிகள் விடுதலைக்காக காத்திருக்கின்றனர். இதேவேளை காசாவில் உள்நாட்டு வன்முறை அச்சம் நிலவும் சூழல் உருவாகியுள்ளது. இதனால் ஹமாஸ் அமைப்பினர் தங்கள் போராளிகளை திரும்ப அழைத்துள்ளனர்.

காணாமல் போன பாலஸ்தீனியர்களின் உடல்களைக் கண்டுபிடிக்க இடிபாடுகளைத் தோண்டி வருவதாக காசாவின் ஹமாஸ் நடத்தும் சிவில் பாதுகாப்பு நிறுவனம் கூறுகிறது. மேலும் 9,500 மக்கள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இஸ்ரேலியப் படைகள் காசா பிரதேசத்தின் சில பகுதிகளில் இருந்து பின்வாங்கியதைத் தொடர்ந்து மீண்டும் உள்நாட்டு வன்முறை ஏற்படும் என்ற அச்சம் நிலவி வருகிறது. இந்நிலையில் காசா மீதான கட்டுப்பாட்டை மீண்டும் நிலைநாட்ட ஹமாஸ் பல்லாயிரம் போராளிகளைத் திரும்பப் பெற்றுள்ளது.

## இருபது அம்ச அமைதித் திட்டம்:

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், கடந்த வாரம் அவர் வெளியிட்ட இருபது அம்ச அமைதித் திட்டத்தின் முதல் கட்டத்தில் இஸ்ரேலும் ஹமாஸும் கையெழுத்திட்டுள்ளதாக கூறுகிறார்.

இதன் பொருள் அனைத்து பணயக் கைதிகளும் மிக விரைவில் விடுவிக்கப்படுவார்கள். எகிப்தில் மூன்று நாட்கள் தீவிர மறைமுக பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

மேலும் வலுவான, நீடித்த மற்றும் நீண்டகால அமைதியை நோக்கிய முதல் படிகளாக இஸ்ரேல் தங்கள் துருப்புக்களை ஒப்புக் கொள்ளப்பட்ட எல்லைகளுக்கு திரும்பப் பெறும் என்று நம்புகின்றனர். ஆனால் முதல் கட்டம் என்ன என்பது பற்றிய கூடுதல் விவரங்கள் இதுவரை வழங்கவில்லை.

## ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம்:

போர் நிறுத்த ஒப்பந்தம் இஸ்ரேலிய அமைச்சரவையால் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் போர்நிறுத்தம் அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உடனடியாக நடக்கும் என்று இஸ்ரேலிய ஊடகங்களில் வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனாலும் இஸ்ரேலிய பிரதமர் அலுவலகத்தின் செய்தித் தொடர்பாளர் அமைச்சரவை ஒப்புதல் அளித்த 24 மணி நேரத்திற்குள் இது தொடங்கும் என்று கூறினார்.

முதலில் இஸ்ரேலிய இராணுவம் ஒரு எல்லை கோட்டிற்கு பின்வாங்கும். இது சுமார் 53% பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் என்று செய்தித் தொடர்பாளர் கூறினார். கடந்த வாரம் வெள்ளை மாளிகையால் விநியோகிக்கப்பட்ட வரைபடத்தின்படி, இது இஸ்ரேலிய வெளியேற்றத்தின் மூன்று கட்டங்களில் முதல் கட்டமாகும் என்று கூறப்படுகிறது.

மேலும் சரிசெய்யப்பட்ட வரிசைப்படுத்தல் கோடுகளுக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன் பின்னர் 72 மணி நேர இடைவெளியில் ஹமாஸ் உயிருடன் இருப்பதாக நம்பப்படும் 20 பணயக்கைதிகளையும் விடுவிக்க வேண்டும். இறந்த 28 பணயக்கைதிகளின் உடல்கள் திரும்பப் பெறப்படும், இருப்பினும் அது எவ்வளவு காலம் ஆகலாம் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இதற்காக இஸ்ரேல் இஸ்ரேலிய சிறைகளில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் சுமார் 250 பாலஸ்தீன கைதிகளையும், காசாவிலிருந்து 1,700 கைதிகளையும் விடுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாலஸ்தீன வட்டாரங்களின் தகவலின்படு, அவர்களின் அடையாளங்கள் தற்போது தெளிவாக இல்லை, ஆனால் ஒப்பந்தம் எட்டப்படுவதற்கு முன்பு ஹமாஸால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் பல ஆயுள் தண்டனை அனுபவிக்கும் உயர் நபர்கள் அடங்குவர்.

அதேசமயம் மிகவும் உயர்மட்ட கைதிகளில் ஒருவரான மர்வான் பர்கோட்டி, பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக விடுவிக்கப்பட மாட்டார் என்று இஸ்ரேலிய செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

## டிரம்பின் போர் நிறுத்த திட்டம்:

அமெரிக்கஅதிபர்டிரம்பின்திட்டத்தின்படி, ஒவ்வொரு இஸ்ரேலிய பணயக்கைதியின் எச்சங்களுக்காக இஸ்ரேல் 15 காசாவாசிகளின் உடல்களையும் திருப்பி அனுப்பும். மேலும் மனிதாபிமான உதவிகளை ஏற்றிச் செல்லும் நூற்றுக்கணக்கான லாரிகளும் காசாவிற்குள் நுழைய அனுமதிக்கப்படும்.

காசாவில் ஆகஸ்ட் மாதம் ஐ.நா. ஆதரவு நிபுணர்களால் பஞ்சம் உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் டிரம்பின் திட்டம் ஒவ்வொரு நாளும் 600 லாரிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாலஸ்தீன வட்டாரங்கள் ஆரம்பத்தில் தினமும் குறைந்தபட்சம் 400 என்றும், அதன் பிறகு இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்தன.

## இரண்டாம் கட்டமாக என்ன நடக்கும்?

டிரம்பின் இருபது அம்சத் திட்டத்தின் முதல் கட்டம் நிறைவடைந்தால், பிந்தைய கட்டங்களின் விவரங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெறும். ஆனால் இவற்றில் பலவற்றில் ஒரு உடன்பாட்டை எட்டுவது கடினமாக இருக்கலாம்.

இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டால் மட்டுமே போர் உடனடியாக முடிவடையும் என்று இந்த திட்டம் கூறுகிறது. காசா பகுதி முழுமையாக இராணுவமய அற்றதாக்கப்படும் என்றும், அனைத்து இராணுவ தாக்குதல் உள்கட்டமைப்புகளும் அழிக்கப்படும் என்றும் அது கூறுகிறது.

டொனால்ட் டிரம்ப் தலைமையில், முன்னாள் இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேர் பங்கேற்கும் 'அமைதி வாரியம்' மேற்பார்வையிடும் பாலஸ்தீன தொழில்நுட்ப வல்லுநர்களின் தற்காலிக இடைக்காலக் குழுவால் காசா நிர்வகிக்கப்படும் என்றும் அந்த திட்டத்தின் மூலம் தெரிய வருகிறது.

## ஹமாஸ் ஆயுதங்களை களையுமா ?

காசா பகுதி சீர்திருத்தம் முழுமையாக செய்யப்பட்டவுடன், அந்தப்பகுதியின்நிர்வாகம்இறுதியில் பாலஸ்தீன அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த போர் நிறுத்த திட்டத்தின்படி, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, காசா நிர்வாகத்தில் ஹமாஸுக்கு எதிர்காலப் பங்கு இருக்காது.

ஆனாலும் ஹமாஸ் உறுப்பினர்கள் அமைதியான சகவாழ்வுக்கு உறுதியளித்தாலோ அல்லது வேறு நாட்டிற்கு பாதுகாப்பாக செல்ல அனுமதிக்கப்பட்டாலோ அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

காசாவை விட்டு வெளியேற எந்த பாலஸ்தீனியர்களும் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள். வெளியேற விரும்புவோர் சுதந்திரமாகத் திரும்பிச் செல்லலாம்.

காசாவை மீண்டும் கட்டியெழுப்பவும், வலுவூட்டவும் டிரம்ப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் நிபுணர்கள் குழுவால் உருவாக்கப்படும். இதேவேளை பிந்தைய கட்டங்களில் பல சிக்கல்கள் உள்ளன என்று கூறப்படுகிறது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிந்தைய கட்டங்கள் குறித்த பேச்சுவார்த்தைகளின் போது பலசர்ச்சைக்குரிய புள்ளிகள் இருக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக ஹமாஸ் முன்னர் தனது ஆயுதங்களை கீழே போட மறுத்துவிட்டது. ஒரு பாலஸ்தீன அரசு நிறுவப்பட்ட பின்னரே அவ்வாறு செய்யும் என்று கூறியது. இருப்பினும்

கடந்த வார இறுதியில் இந்தத் திட்டத்திற்கான ஆரம்ப பதிலில் ஆயுதங்களை களைவது பற்றி குழு எதுவும் குறிப்பிடவில்லை, இது அதன் நிலைப்பாட்டில் மாறவில்லை என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

## இஸ்ரேல் ஆக்கிரமிப்பை தொடருமா ?

இஸ்ரேல்இந்த போர்நிறுத்ததிட்டத்திற்கு முழுமையாக ஒப்புக் கொண்டது. ஆனாலும் போருக்குப் பிந்தைய காசாவை பாலஸ்தீன அதிகாரத்திடம் ஒப்படைக்க நெதன்யாகு பின்வாங்கினார். மேலும் இந்த பிரதேசத்தை நிர்வகிப்பதில் ஹமாஸ் எந்தப் பங்கையும் வகிக்காது என்று வலியுறுத்தினார்.

இதேவேளை ஒருங்கிணைந்த பாலஸ்தீன இயக்கத்தின் ஒரு பகுதியாக காசாவில் எதிர்காலத்தில் சில பங்கை வகிக்க எதிர்பார்க்கிறோம் என்றும் ஹமாஸ் கூறியுள்ளது.

இஸ்ரேலிய துருப்புக்கள் திரும்பப் பெறப்படும் அளவு மற்றொரு முக்கியமான விஷயம். இஸ்ரேல் தனது முதல் திரும்பப் பெறுதல் காசாவின் சுமார் 53% கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொள்ளும் என்று கூறுகிறது. வெள்ளை மாளிகைத் திட்டம் சுமார் 40%, பின்னர் 15% வரை மேலும் திரும்பப் பெறுவதைக் குறிக்கிறது.

## சிக்கலான இறுதி கட்டம்:

இந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின் இறுதி கட்டம் பாதுகாப்பு சுற்றளவு ஆகும். அது எந்தவொரு மீண்டும் எழுச்சி பெறும் பயங்கரவாத அச்சுறுத்தலிலிருந்தும் காசா சரியாகப் பாதுகாக்கப்படும் வரை இருக்கும் என்பதை உறுதி செய்கிறது.

மேலும் இந்த ஒப்பந்தத்தில் உள்ள வார்த்தைகள் தெளிவற்றவையாக உள்ளன. முக்கியமாக இஸ்ரேலிய படைகள் முழுமையாக திரும்பப் பெறுவதற்கான தெளிவான காலக்கெடுவை வழங்கவில்லை. ஹமாஸ் அமைப்பு இந்த விஷயத்தில் உறுதியாக இருப்பதாக கூறியுள்ளது. காலக்கெடுவை தெளிவுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

# பொதுமக்களது பங்களிப்பு கிடைத்தால் போதைப் பொருளை ஒழிக்க முடியும்

## கடற்படை வடக்கு பிராந்திய கட்டளைத் தளபதி கருத்து

போதைப்பொருள்கட்டுப்படுத்தலில்கடற்படைஒருகுறிப்பிட்ட பாத்திரத்தை மட்டுமே செய்ய முடியும் என சுட்டிக்காட்டிய இலங்கை கடற்படையின் பிராந்திய கட்டளைத் தளபதி அட்மிரல் புத்திக லியனகமகே பொது மக்களது பங்களிப்பும் எமக்கு கிடைக்கப் பெற்றால் முழுமையான இலக்கை எட்ட முடியும் என்றும் தெரிவித்தார்.

கடற்படையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு காங்கேசன்துறை கடற்படை தளத்தில் நேற்று மேற்கொண்ட ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -வடக்கு கடல் மார்க்கமாக போதைபொருள் கடத்தல்கள் நடைபெற்றுவருவது குறித்து நாம் அதிக அக்கறை செலுத்தி மேற்கொண்ட முயற்சிகளால் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்னும் பல நூறு கிலோ போதைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன. குறித்த குற்றத்துடன் தொடர்புடைய பலர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டும் உள்ளனர். இதே நேரம் கடற்படை ஒரு பிரதேசத்துக்கானதல்ல. அது நாடு முழுவதுக்குமான ஒரு பாதுகாப்புக் கட்டமைப்பு. இலங்கைத் தீவின் அனைத்து கடற்பரப்பினதும் பாதுகாப்பு எம்மிடம் வழங்கப்பட்டுள்ளது. அதை நாம் முடியுமானவரை



திறன்பட செய்துவருகின்றோம். கடற்படைக்கு உள்நாடு புலனாய்வு கட்டமைப்பின் தகவல் மடுமல்லாது சர்வதேச புலன் தகவல்களும் கிடைக்கப்பெற்று துரித நடவடிக்கை எடுக்கின்றது. ஆனாலும் எமக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகள் அவசியம்.

அந்தவகையில் எமக்கு கிடைக்கின்ற தகவல்களுடன் மக்களாகிய நீங்களும் தகவல்களை வழங்கி குறித்த செயலில் ஈடுபடும் தரப்பையும் அவர்களது கட்டமைப்பையும் இல்லாதொழித்து போதைப்பொருள் அபாயத்திலிருந்து நாட்டை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றார்.

# யாழ். நாக விகாரையில் வஸ்திர தான நிகழ்வு



யாழ். ஸ்ரீ நாகவிகாரையின் வருடாந்த வஸ்திர தானமும், கட்டின பிங்கல வைபவமும் நேற்று இடம்பெற்றது. தமிழ் பௌத்த காங்கிரஸ், சர்வதேச இந்து பௌத்த ஒற்றுமைக்கானஅமைப்பு மற்றும் ஈழத்து இந்து சமுதாயப் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் யாழ். ஸ்ரீ நாகவிகாரையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், ஆரியகுளம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளோடு வீதி உலா ஆரம்பமாகி யாழ். நாக விகாரையை வந்தடைந்தது.அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற விசேட வழிபாடுகளுடன் வஸ்திர தானமும், கட்டின பிங்கல வைபவமும் இடம்பெற்றது. இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், நாகவிகாரை விகாராதிபதி ஸ்ரீ விமலதேரர், மறவன்புலவு சச்சிதானந்தன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ரசிக்க குமார, இந்திய தூதரக அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சாய்ந்தமருதில் பாதுகாப்பு அமைச்சர்

(பாறுக் ஷிஹான்)



சாய்ந்தமருது பகுதிக்கு வருகை தந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பொலிஸாருடன் கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றினார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் மா அதிபர் பிரியந்தவீரசூரியபொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனரத் ஆகியோர் கிழக்கு பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர அம்பாறை பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல அம்பாறை மாவட்ட பதில் பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் குமார கலந்து சிறப்பித்தனர்.

குறித்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்புஅம்பாறைமாவட்டபொலிஸ்உயரதிகாரிகள் பொலிஸ்அத்தியட்சகர்இதரபொலிஸ்உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் சரோஜா' என்ற தொனிப் பொருளில் பாதுகாப்பற்ற சிறுவர் சிறுமியர் தொடர்பில் ஸ்ரிக்கர் முச்சக்கரவண்டிக்கு ஒட்டும் நிகழ்வும் அங்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# பிரம்படிப் படுகொலையின் 38ஆவது நினைவேந்தல்

## யாழ். கொக்குவிலில் அனுஷ்டிப்பு

யாழ் கொக்குவில் பிரம்படி பகுதியில் காணப்படும் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நினைவுத் தூபியில் நேற்று காலை 9.00 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன நிகழ்வில் நினைவு தூபிக்கான பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்றமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னாள் நாடாளுமன்றமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்1987 ஆண்டு 11திகதி மற்றும் 12 திகதிகளில் யாழ கொக்குவில் பிரம்படி பகுதியில் இந்திய இராணுவத்தால் 50 ற்கு மேற்பட்ட அப்பாவி பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# காரைதீவு ராவணா லவனுக்கு தேசிய வீரர் மானிட விருது

*(சகா தேவராஜா)*



*இலங்கையின் 28 வது தேசிய வீரமானிடர் விருது விழாவில் காரைதீவு ராவணா அமைப்பின் தலைவரும், ஹொக்கி லயன்ஸ் கழகத்தின் தலைவருமான தவராஜா லவன் வீர மானிடர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.*

*அவருடன்அந்தஅமைப்பைச் சேர்ந்த 15 வீரர்களுக்கும் இவ் விருது வழங்கப்பட்டது.*

*பொதுமக்கள் வீரச் செயலுக்கான மன்றம் இலங்கையின் 28 வது தேசிய வீரமானிடர் விருது விழாவை ஏற்பாடு செய்திருந்தது. இந் நிகழ்வில் சபாநாயகர் டொக்டர் ஜகத் விக்ரமரத்ன கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.10.2025இல் வெளியிடப்பெற்றது